## 01 நிறைவேற்றுச் சுருக்கம்

1979 ஆம் ஆண்டில் திறந்த பொருளாதார கொள்கை இலங்கையில் செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் இந் நாட்டிற்குத் தேவையான உணவு அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்டதுடன் திறந்த பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து உணவின் இறக்குமதிக்காக தனியார் துறையினரின் தலையீடு குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. உணவின் இறக்குமதியின் போது அவற்றின் தரம் குறித்து கருத்திற்கொள்வது கட்டாயமானதுடன் அச் செயற்பாடு சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் செயற்படும் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். 1991 இன் 20 ஆம் இலக்க உணவு (திருத்தல்) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளராவதுடன், அமைச்சரால் நியமிக்கப்படும் மேலதிக அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் நியமிக்கப்பட முடியும் என்பதனால் அமைச்சால் மேலதிக அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இறக்குமதி செய்யப்படும் உணவு கொள்கலன்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தெரிவுகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் அவற்றின் தரம் குறித்து கருத்திற்கொள்ளப்பட்டதை அடுத்து அவற்றை விடுவிப்பதற்கோ அல்லது வேறு நடைமுறைகளை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். பால்மா, மீன், ரின் மீன், பட்டர் மற்றும் ஏனைய இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெறும் வரையில் இலங்கை சுங்கத்திடமும் தனியார் தரப்பினரிடமும் உள்ள கொள்கலன்களில் வைத்துக்கொள்ளப்படுவது இந் நடைமுறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு பால்மாவில் அடங்கியுள்ள டீ.சீ.டீ. இரசாயனம் பரிசோதனை அல்லது பகுப்பாய்வு உள்ளடங்கலாக உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சகல நச்சு இரசாயனப் பொருள் வகை மற்றும் நுண்ணுயிரியல் நிலைகளின் பரிசோதனைகள் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் (MRI) போன்ற நிறுவகங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இறக்குமதி செய்யப்படும் ரின் மீன், குளிரூட்டப்பட்ட மீன், பால்மாக்களின் கதிரியக்க சோதனை அணுசக்தி சபையால் மேற்கொள்ளப்படும். இவ் வசதிகள் அரசாங்க

நிறுவகங்களில் இல்லாத சந்தர்ப்பங்களில் தனியார் ஆய்வுகூடங்களின் சேவை பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

இச் செயலாற்றல் கணக்காய்வின் நோக்கம் தரமான உணவு இறக்குமதி தொடர்பாக பிரதான உணவு அதிகாரிகள் உள்ளடங்கலாக உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவு மற்றும் இறக்குமதி செய்யப்படும் உணவிற்காக அதிகாரம் பெற்ற உணவு அதிகாரிகளான சுங்க பணிப்பாளர் போன்ற உத்தியோகத்தர்களின் நிறுவகங்களின் தலையீட்டின செயலாற்றல் மதிப்பீடாகும். இக் கணக்காய்வின் முக்கிய அவதானிப்புகளில் உணவு அதிகாரச்சட்டம் மற்றும் பிரமாணங்களின் படி, பால்மாக்களில் கொழுப்பு உள்ள அளவு மி.கி. 26 இற்கும் குறைவாக இருத்தல், மீன் வகைகளில் போர்மலின் அளவு மி.கி. 5 இனைப் பார்க்கிலும் அதிகரித்தல் போன்ற உணவு நிபந்தனைகளிற்கு இணங்கியிராமை கண்டறியப்பட்ட போதிலும், அம் மாதிரிகளிற்கு உரித்தான உணவுக கொள்கலன்கள் அழிக்கப்பட்டுள்ளதாக சுங்க பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இறக்குமதியாளர்களால் கைவிடப்பட்டிருந்த கொள்கலன்களில் காணப்பட்ட மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற உணவை சந்தைக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சிலவும் அவதானிக்கப்பட்டன. பிரதான உணவு அதிகாரியான சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் உணவுத் துறை உள்ளடங்கலாக பாரிய நோக்கெல்லையைக் கொண்ட செயற்பாட்டை மேற்கொள்வதனால் அவரது பொறுப்பும் செயற்பாடும் சிக்கலானதாகக் காணப்பட்டது.

மாதிரி அறிக்கை வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் உணவு சந்தைக்கு வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படல், உணவுப் பொருட்கள் காலாவதி அடைதல், நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் இருப்பிற்கு ஒப்பாக பரிசோதனைக்காக உட்படுத்தப்படும் மாதிரிகள் போதாமை மற்றும் மாதிரி அறிக்கைகள் பெறப்பட முன்னர் தனியார் களஞ்சியங்களில் இருந்து உணவுப் பொருள் இருப்பு சந்தைக்கு வழங்கப்படுதல் போன்ற விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் (MRI) மற்றும் இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவன ஆய்வுகூடங்களில் இடவசதி போதாமை, நவீன உபகரணங்களில் பற்றாக்குறை நிலவுதல், ஆய்வு கூடம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நிறுவகங்கள் ஒன்றில் இருந்து ஒன்று தொலைவாகக் காணப்படுதல், ஆய்வு கூடங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் உணவு மற்றும்

மருந்துப்பொருள் பரிசோதகர்களுக்கு உரித்தான நாளதுவரையான அறிவூட்டல்கள் மற்றும் பயிற்சிகள் போதாமை, மாதிரி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அழிப்பதற்கோ அல்லது மீள ஏற்றுமதி செய்வதற்கோ எடுக்கப்படும் கட்டளைகள் செயற்படுத்தப்பட்டமைக்கு சான்றுகள் இன்மை போன்ற முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பான அவதானிப்புகள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தரமான உணவுப் பொருட்கள் மாத்திரமே இந்நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக பிரதான உணவு அதிகாரியின் மூலம், இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் துறைமுகத்தில் இருந்து சந்தை வரை வரும் நடைமுறையில் உள்ள சகல படிமுறைகளும் முறையான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும். இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் சுகாதாரக் காப்பீட்டைப் பரீட்சிப்பதற்காக அரசாங்கத்தின் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் (MRI) மற்றும் இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம் உள்ளடங்கலாக பரிசோதனைகளை மேற்கொள்ளும் நிறுவகங்களில் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவது அத்தியாவசியமாகும். இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் தரம் தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ள இறக்குமதியாளர்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவகங்கள் தொடர்பாக கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான சட்டப் பின்னணியைத் தயாரிக்க வேண்டியதுடன் இதன் மூலம் ஏற்படும் பிரதிபலன்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கப்பெறும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளும் இவ் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

# 02. பின்னணி

## 2.1 அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் போது இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமானதில் இருந்து அதுவரையில் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின கீழ் ஏகபோகமாக இடம்பெற்ற உணவு இறக்குமதிச் செயற்பாட்டில் தனியார் தொழில் முயற்சியாளர்களின் தலையீடும் ஆரம்பமாயிற்று. இதன் படி, அத்தியாவசியமானதாக பாரியளவில் நுகரப்படும் உணவுப் பொருட்களாக இனங்காணக் கூடிய பால்மா, பருப்பு, கருவாடு, கோதுமை மா போன்ற உணவுப் பொருள் வகைகள் மாத்திரம் அன்றி வேறு அத்தியாவசியமற்ற உணவுப் பொருள் வகைகளும் இறக்குமதி செய்யப்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

இலங்கையில் உணவுப் பொருள் தொடர்பாக செயற்படும் பிரதான உணவு அதிகாரி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகமாவதுடன் உணவுப் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை மற்றும் பகிர்வை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதற்காக 1980 இன் 26 ஆம் இலக்க உணவுப் பொருள் அதிகாரச்சட்டம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளது. இவ்வாறே இவ் அதிகாரச்சட்டத்தைச் செயற்படுத்துகையில் ஏற்படும் சகல விடயங்கள் குறித்தும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அதிகாரச்சட்டத்தின் கீழ் உணவுப் பொருள் ஆலோசனைக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது சுகாதார அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள, பிரதான உணவு அதிகாரியான சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது. 1980 இன் 26 ஆம் இலக்க உணவுப் பொருள் அதிகாரச்சட்டத்தின் 10(4)(ஆ) பிரிவின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் தொடர்பான உணவுப் பொருள் அதிகாரி சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஆகும்.

இது தவிர இலங்கைக்கு தரமான உணவை இறக்குமதி செய்வது தொடர்பாக அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் அணுசக்தி சபை போன்ற நிறுவகங்களால் தமது செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அரசாங்கத்தின் இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இறக்குமதி

செய்யப்படும் உணவுப் பொருள் தெரிவுப் பரிசோதனை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர் ஆவார். உணவுப் பொருட்களுக்கு உரிய தரத்தைத் தயாரித்தல், உணவுப் பொருட்களின் மாதிரிகளைப் பரிசோதித்தல், வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல், அவ் உற்பத்தியாளர்களின் தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல் போன்ற செயற்பாடுகள் இலங்கை தர நிர்ணய நிறுவகத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. இறக்குமதி ஏற்றுமதித் திணைக்களத்தால் 1969 இன் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) அதிகாரச்சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக இலங்கையில் பொருட்களை இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அணு சக்தி அதிகாரசபையால் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் கதிரியக்கத் தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளனவா என்பது குறித்து பரிசோதிப்பதற்கான வசதி வழங்குனரின் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.2 கணக்காய்வின் நோக்கெல்லை

போதியளவானது எனக் கருதப்படும் மற்றும் இது தொடர்பான நியாயமான முடிவை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு உரித்தான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் கொள்கலன் நடவடிக்கைகளை கூடுதலாக மேற்கொள்ளும் ஒருகொடவத்த கொள்கலன் இறங்குதுறை நடவடிக்கைகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தியதுடன் அங்கு 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 20 வகையான முக்கிய உணவுப் பொருட்கள் தொடர்பிலான தொடர்புற்ற ஆவணங்களும் பரிசோதனை அறிக்கைகளும் பரிசோதிக்கப்பட்டன.

உணவுக் கொள்கலன்களுக்கு உரித்தான தன்மை மற்றும் அளவைக் கருத்திற்கொள்கையில் அவை முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட முடியாதவையாகும். மேலும், உணவுப் பொருட்களின் மாதிரிகளின் பிரதிநிதித்துவத்தைப் போன்று உணவுப் பொருட்களைப் பரிசோதகர்களினதும் இத் துறை தொடர்பான அனுபவம் மற்றும் இது வரை நீண்டகாலமாக பின்பற்றப்பட்டிருந்த முறைமைகள் போன்ற விடயங்களின் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தன்மை கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு உரிய உணவுப் பொருட்களின் தெரிவுப் பரிசோதனை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களின் பரிசோதனை அறிக்கை அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## 2.3 கணக்காய்விற்கான அதிகாரப் பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.4 கணக்காய்விற்காக இத் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான காரணம்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு தேவையான காரணியான உணவு, இதனாலான அதன் முக்கியத்துவம் காரணமாக மனிதத் தேவைப்பாட்டுப் படிநிலையில் முன்னுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளது. சில காலமாக மூடிய பொருளாதாரம் நிலவிய எமது நாடு திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியமையால் அரசாங்கத்தைப் போன்று தனியார் தொழில் முயற்சியாளர்களின் மூலம் பல்வேறு வகையிலான உணவுப் பொருட்களை நாட்டினுள் இறக்குமதி செய்வதற்கு ஆரம்பமானது. இதற்கு இணையாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் தரத்தைப் பாதுகாப்பது தொடர்பில் பல்வேறு சட்டங்கள், விதிகள், பிரமாணங்களைப் போன்று இவை தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அரச நிறுவகங்கள் உருவாகின.

எவ்வாறெனினும், சந்தையில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் பெரும்பாலானவை குறித்த தரத்தில் இன்றி அல்லது மனித நுகர்விற்கு ஏற்ற நிலையில் இன்றி இருப்பதனால் தற்போது விவாதத்திற்கு உட்பட்டுள்ளது. மேலும் பெருமளவில் தொற்றா நோய் நாட்டினுள் பரவும் நிலை காரணமாக இறக்குமதி செய்யும் உணவுப் பொருட்களின் தரத்தைப் பாதுகாக்கும் முக்கியத்துவம் மற்றும் இது தொடர்பாக அரசாங்க நிறுவகங்களின் தலையீட்டின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இத் தலைப்பு கணக்காய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## 2.5 கணக்காய்விற்கான பிரவேசமும் நோக்கமும்

(அ) கணக்காய்விற்கான பிரவேசத்திற்காக பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அடிப்படைகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

- ❖ 1991 இன் 20 ஆம் இலக்க உணவு (திருத்தல்) அதிகாரச்சட்டம் மற்றும் 2011 இன் 29 ஆம் இலக்க உணவு (திருத்தல்) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டம் மற்றும் அவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டளைகள்.

- ❖ 1969 இன் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) அதிகாரச்சட்டம் மற்றும் 2006 யூலை 01 ஆம் திகதிய 1447.∴28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2006 இறக்குமதி (தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டு) கட்டளை.

- ❖ உரிய ஏனைய ஆவணங்களின் மீளாய்வும் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளும்.

(ஆ) கணக்காய்வின் நோக்கம்

தரமான உணவுப் பொருட்களின் இறக்குமதி தொடர்பாக பிரதான உணவுப் பொருள் அதிகாரி உட்பட உணவுப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவு மற்றும் இறக்குமதி உணவுப் பொருட்களுக்கான அதிகாரம் உள்ள உணவுப் பொருள் அதிகாரியான சுங்கப் பணிப்பாளர் நாயகம போன்ற உத்தியோகத்தர்களின் நிறுவகங்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்.

## 2.6 வரையறைகள்

இச் செயலாற்றல் கணக்காய்வு திட்டமிடப்படுகையில் நோக்கெல்லை வரையறுக்கப்படுவதைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. மருந்துப் பொருட்களும் உணவுப் பொருட்களும் பரீட்சகர்களுடன் உணவுக் கொள்கலன்கள் பரீட்சிப்பின் போது கொள்கலன்களின் உள்ளே சென்று பரீட்சிக்கப்படுவதற்கு முடியாமை, சில ஆய்வுகூடங்கள் பரீட்சிக்கப்படுவதற்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு வசதி இன்மை, பதவியணியினதும் ஏனைய வளங்களினதும் வரையறைகளின் மத்தியில் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட மொத்த உணவு வகைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிக்கு மட்டுப்படுத்தியதுடன் இறுதி பரிந்துரை தெரிவுப் பரிசோதனைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உணவு வகை தொடர்பான அவதானிப்பை அடிப்படையாகக் கொண்டதாகும்.

## 03. விபரமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் மற்றும் நிறுவகங்களின் கருத்துக்களைத் தெரிவித்தல்

கணக்காய்வு அவதானிப்புகள், விபரமாகக் கலந்துரையாடப்பட்டு இதற்கு உரித்தான பரிந்துரைகள் பின்வருமாறாகும்.

### 3.1 இறக்குமதி செய்யப்பட்ட உணவிற்காக உரிய உணவு அதிகாரச்சட்டம் மற்றும் பிரமாணங்கள்

#### 3.1.1 போமல்டிஹயிட் இரசாயனச் சேர்க்கை

மீன்கள் இறக்குமதி செய்யப்படுகையில், ஏற்றுமதி செய்யும் நாட்டின் அல்லது சாத்தியமான நாட்டின் உரிய தேசிய அதிகாரசபையால் அம் மீன்களின் 2010 உணவு (மீன்களில் அடங்கியுள்ள போமல்டிஹயிட்) இணங்குவதாகக் குறிப்பிடும் இணக்கச் சான்றிதழ் ஒன்று, அம் மீன்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படும் சந்தர்ப்பத்தின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீன் உணவுகளில் 1 கிலோமீற்றருக்கு 5 மில்லிகிராம் போமல்டிஹயிட் அளவு அதிகரிக்கப்படுமாயின் அவை மனித நுகர்விற்கு ஏற்றவை அல்லாதமையால் அவ் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படலாகாத போதிலும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தினதும் நகர இரசாயனப் பகுப்பாய்வாளரால் விநியோகிக்கப்பட்ட அறிக்கையின் படி, 2011 - 2013 ஆம் ஆண்டு வரை 07 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட மீன் இறக்குமதிகளில் இருக்க வேண்டிய போமல்டிஹயிட் அளவில் 1 கிலோகிராமிற்கு 0.7 மில்லி கிராமிற்கும் 2.5 மில்லி கிராமிற்கும் இடையிலான வீச்சைக் காட்டிலும் அதிகளவில் இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்கத்தால் அவை இறக்குமதியாளரிற்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 3.1.2 பால் மற்றும் பால் உற்பத்திகள்

விபரம் பின்வருமாறாகும்.

(அ) பால் மற்றும் பால் உற்பத்திகள் தொடர்பாக விநியோகிக்கப்பட்டுள்ள உணவுப் பிரமாணங்களின் படி, முழு ஆடைப் பால்மாவில் கொழுப்புப் பதார்த்தம் 26 சதவீதத்திற்கும் குறைவற்ற அளவில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் நகர இரசாயன மற்றும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரால் விநியோகிக்கப்பட்ட தெரிவுச் செவ்வை அறிக்கையின் படி, 2012 முதல் 2013 வரையான

காலப் பகுதியின் போது 4 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா இருப்புகளில் கொழுப்பின் அளவு இருக்க வேண்டிய சதவீதத்தைப் பார்க்கிலும் 0.4 இற்கும் 1.4 இற்கும் இடைப்பட்ட சதவீத வீச்சினால் குறைவடைந்திருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2010 உணவுப் பொருட்கள் ( பால் மற்றும் பால் உற்பத்திகளில் அடங்கும் மெலமைன்) கட்டளையின் படி, மி.கி/கி.கி (பத்து இலட்ச பங்குகள்) 1.0 இற்கு மேலான மெலமைன் உள்ளடக்கப்பட்ட எந்தவித பால் அல்லது பால் உற்பத்தி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட அல்லது உற்பத்தி செய்யப்படலாகாத போதிலும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவிற்காக உற்பத்தி செய்யப்படும் நாட்டில் விநியோகிக்கப்படும் இணக்கச் சான்றிதழின் அடிப்படையில் மாதிரிப் பரிசோதனை இன்றி பால்மாவில் மெலமைன் உள்ளடக்கப்படவில்லை எனத் திருப்திகொண்டு மேற்குறித்த பிரமாணத்தின் படி பால்மா இருப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.

### 3.1.3 உணவின் ஆயுட் காலம்

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உணவு இலங்கைக்குக் கொண்டுவரப்படும் சந்தர்ப்பங்களின் போது ஆகக் குறைந்தது 60 சதவீத ஆயுட் காலத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதனை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1694/5 ஆம் இலக்க 2011 பெப்ரவரி 23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களின் போது உணவு ஆலோசனைக் குழுவால் நிச்சயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியின் போது விற்பனை செய்து முடிக்குமாறு 4 உணவு வகைகள் தொடர்பாக 5 சந்தர்ப்பங்களின் போது உரிய இறக்குமதியாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சந்தர்ப்பங்களின் போது இறக்குமதியாளர் உணவு ஆலோசனைக் குழுவின் தீர்மானத்தின் படி, செயற்பட்டதா என்பது குறித்து உறுதிப்படுத்துவதற்காக உறுதியான நடைமுறை உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாக அலகிடம் இன்மை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.1.4 விடுவிக்கப்படாத உணவு இருப்பு நிபந்தனைகளுடன் விடுவிக்கப்படல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி, 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது உணவு ஆலோசனைக் குழுவின் மூலம் நிபந்தனைகளுடன் பொது மக்களின் நுகர்விற்காக விடுவிக்கப்படுவதற்கு விடுவிக்கப்பட்ட உணவு இருப்பு தொடர்பான விபரம் கண்டறியப்பட்டது. அவ் விபரங்களின் படி, தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 13 கொள்கலன்களில் 07 வகையான உணவுப் பொருட்கள் தொடர்பாக அவ் பொருட்களின் நுகர்வு ஆயுட் காலம் போதாத உணவு வகைகளும் உணவுப் பொருட்களில் இருக்க வேண்டிய கூறுகள் தேவையான அளவில் இன்மையும் கொள்கலன்களில் உணவுப் பொதியீட்டுப் பொருட்களில் அச்சிடப்பட்டிருந்த தகவல்கள் மாறுபட்டிருந்தமை போன்ற விடயங்களுடன் காணப்பட்ட போதிலும் அவை நிபந்தனைகளுடன் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக உணவு ஆலோசனைக் குழுவின் மூலம் 02 சந்தர்ப்பங்களின் போது அழிக்கப்படுவதற்கோ அல்லது மீள ஏற்றுமதி செய்யப்படுவதற்கோ பரிந்துரைக்கப்பட்டிருந்த மாம்பழச் சாறும் அயடீன் அடங்கிய உப்பும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.1.5 மரபணு மாற்றப்பட்ட உணவின் இறக்குமதி

மரபணு ரீதியாக மாற்றப்பட்ட உணவு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதாயின் இதற்காக சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ, போசணை மற்றும் உள்நாட்டு அமைச்சின் உணவு கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவால் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். 2013 ஆம் ஆண்டின் போது மரபணு மாற்றப்பட்ட உணவை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெற்ற இறக்குமதியாளர்கள் எவரும் இல்லை என உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தகவல்கள் விசாரணைகளின போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மரபணு ரீதியாக மாற்றப்பட்ட உணவு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்காக மரபணு மாற்றங்களுக்கு உட்படக்கூடிய உருளைக் கிழங்கு, தக்காளி, சோயா மா, மோல்ட் மா, சோளமா போன்ற உணவுப் பொருட்கள் மாதிரி மரபணுத் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு எந்தவித ஆபத்தும் இல்லை என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**அறிவிப்பு**

i. உணவுப் பொருள் அதிகாரச்சட்டத்தின் படி, உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள ஒவ்வொரு கூறுகளும் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளில் காணப்படாததுடன் அவை சந்தையில் வழங்கப்படுவதன் மூலம் சுகாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டு சந்தையில் நுகர்வோரை சுரண்டும் போக்கு உருவாக்கப்படும்.

ii. மனித உணவிற்கு பொருத்தமற்ற கூறுகளுடனான உணவுப் பொருட்களைச் சந்தைக்கு வழங்குவதைத் தடுப்பதற்காக, உரிய நிறுவகங்களில் செயற்படுத்தப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் செயற்படுத்தப்படாமையால் உணவுப் பொருள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்தப்படாமை.

**பரிந்துரைகள்**

i. உணவு அதிகாரச்சட்டத்தின் படி, நுகர்விற்கு தகாத உணவுப் பொருட்கள் தொடர்பாக பரிசோதனை அறிக்கைகளில் வெளிப்படும் சந்தர்ப்பங்களின் போது சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செயற்படல்.

ii. மரபணு மாற்றங்களுக்கு உட்படும் ஆபத்துடனான உணவுப் பொருட்களை இனங்கண்டு அவற்றின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளலும் மரபணுத் தொழில்நுட்ப நிறுவனங்களிற்கு அனுப்பி நுகர்விற்கு தகாதவை என உறுதிப்படுத்திக்கொள்ளல்.

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கருத்துத் தெரிவிப்பு

**பரிந்துரை (3.1.1 பந்தி)**

இறக்குமதி செய்யப்படும் போமல்டிஹயிட் குறித்த அளவைப் பார்க்கிலும் கூடுதலாக அடங்கிய 10 அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட 08 கொள்கலன்கள் தொடர்பாகச் செயற்பட வேண்டிய முறை உணவுப் பொருள் இறக்குமதி பரிசோதனைப் பிரிவின் உத்தியோகத்தர்களால் இலங்கை சுங்கத்திற்கு இவ் உணவுப் பொருட்கள் 2010 உணவு (மீன்களில் அடங்கியுள்ள

போமல்டிஹயிட்) அறிவுறுத்தல்களுக்கு இணங்கியிராமையால் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் படி செயற்படுமாறே அறிவிக்கப்பட்டிருந்தது.

**அவதானிப்பு (3.1.2 பந்தி)**

"இவ்வாறு மனித நுகர்விற்குப் பொருத்தமற்றதாக இனங்காணப்பட்ட உணவுப் பொருட்கள் தொடர்பாக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் படி செயற்படுமாறு சுங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது."

**அவதானிப்பு (3.1.3 பந்தி)**

"இத்தகைய சந்தர்ப்பங்களில் உரிய பகுதியின் உணவுப் பொருட்களின் அதிகாரியான அதிகாரப்பொறுப்புடைய உத்தியோகத்தர்கள், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் உணவுப் பொருள் மற்றும் மருந்துப்பொருள் பரிசோதகர்களுக்கு தொலைபேசி மூலம் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது."

**அவதானிப்பு (3.1.4 பந்தி)**
பதிலளிக்கப்படவில்லை.

**அவதானிப்பு (3.1.5 பந்தி)**

"இத்தகைய ஆபத்துடனான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கையில் மரபணு மாற்றம் ஏற்படவில்லை என இறக்குமதி செய்யும் நாட்டால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழின் படி உணவுப் பொருட்களை விடுவிப்பதற்கான பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது."

" இது வரையில் மரபணு மாற்றப்பட்ட உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்படாமை மற்றும் வியாபாரத் தடைகளைக் குறைப்பதற்காக மரபணுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தாத நாடுகளில் இருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை."

## 3.2 தரப்படுத்தல்/ தரக் கட்டுப்பாட்டுக் கட்டளைகளுக்கு இணங்குதல்

### 3.2.1 மனித நுகர்விற்குப் பொருத்தமற்றதாக இனங்காணப்பட்ட உணவுப் பொருட்கள்

1969 இன் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் படி விதிக்கப்பட்ட 2006 இறக்குமதி (தரப்படுத்தல மற்றும் தரக் கட்டுப்பாடு) கட்டளைப்படி இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் 33 குடிபான வகைகளுக்காக இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தால் இறக்குமதியாளர் ஒருவருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தால் அன்றி எந்த ஓர் இறக்குமதியாளராலும் விற்பனை, விற்பனைக்காக முன்வைத்தல், பயன்படுத்தல் அல்லது பகிர்ந்தளிக்கப்படலாகாது.

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட இக் கட்டளை உரித்தாகும் மீன் டின் இருப்புடனான முறையே 31,620 பெட்டிகளும் 16,040 பெட்டிகளும் இலங்கை தர நிர்ணய இல. 591 இன் படி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் (sensory test) இன் படி மனித நுகர்விற்கு பொருத்தமற்றவையாக இனங்காணப்பட்டு அவ் இருப்புகளை விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது எனவும் இவ் இருப்புகள் மீள ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா அல்லது அழிக்கப்பட்டனவா என்பது குறித்து இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவகத்திற்கு அறிவிக்கும் படியும் குறிப்பிட்டு இலங்கை சுங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அக் கடிதங்களில் உரிய இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள் இருப்பின் சுங்கத் தொடர்பு இலக்கமோ அல்லது திகதி குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு தடங்கலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. குறித்த டின் மீன்களின் இருப்பிற்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனகத்திற்கு அறிவிக்குமாறு குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக எந்தவித பதில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் குறித்த இருப்புகள் அழிக்கப்பட்டனவா அல்லது மீள்ஏற்றுமதி செய்யப்பட்டனவா என்பது குறித்த தகவல்கள் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தன. மேலும் இது குறித்து உணவுப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டிராததுடன் இவ் உணவுப் பொருட்கள் மனித நுகர்விற்காக சந்தைக்கு விநியோகிக்கப்படுவதற்கான

வாய்ப்பு இருப்பதனால் அவ் உணவுப் பொருட்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படாமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 3.2.2 தாமதமின்றி மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல்

இலங்கை சுங்கத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கிடைக்கப்பெற்றதை உடனடுத்து மாதிரிகளைப் பெற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் இறக்குமதி செய்யப்பட்ட 20 சந்தர்ப்பங்களிற்கு உரித்தான டின் மீன்களுக்கான மாதிரிகளைப் பெற்றுக்கொள்கையில் ஏற்பட்ட தாமதம் 07 நாட்களில் இருந்து 91 நாட்களை வரையான கால வீச்சைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. குறித்த டின் மீன்களின் மாதிரிகள் மனித நுகர்விற்கு பொருத்தமற்றவையாக இனங்காணப்பட்டிருந்ததுடன் இது குறித்து தாமதமின்றி இலங்கை சுங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அறிவித்தலில் ஏற்பட்ட தாமதம் 06 நாட்களிற்கும் 05 மாதங்களிற்கும் இடையிலான கால வீச்சில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**அறிவிப்பு**

இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தினால் பரிசோதிக்கப்பட்ட டின் மீன்களில் மனித நுகர்விற்கு பொருத்தமற்றதாக இனங்காணப்பட்ட இருப்பு தொடர்பாக உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டிராமை மற்றும் இலங்கை சுங்கத்திற்குத் தாமதமாக அறிவிக்கப்பட்டமையால் இத்தகைய மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படும் ஆபத்து நிலவுகின்றது.

**பரிந்துரை**

i. இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தினால் உரிய தரத்தின் படி மனித நுகர்விற்கு பொருத்தமற்றதாக இனங்காணப்பட்ட உணவுப்பொருள் இருப்பு தொடர்பான தொடர் நடவடிக்கைக்காக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்களின் பிரதிகள் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

ii. இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தினால் சுங்கப் பணிப்பாளர் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்களிற்கு உரித்தான உணவு இருப்புகளில் சுங்கத் தொடர்பு இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிட்டு அனுப்பி வைப்பதன் மூலம் உணவு இருப்பு தொடர்பாக தேவையான நடவடிக்கையை உடன் எடுப்பதற்கு வசதியளித்தல்.

iii. இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்திற்கும் இலங்கை சுங்கத்திற்கு இடையே மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப்பொருட்களின் இருப்பு தொடர்பான தகவல்களை விரைவாகவும் சரியாகவும் அறிவிப்பதற்கான முறையான நடைமுறையைத் தயாரித்தல்.

**சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கருத்துத் தெரிவிப்பு**

பதிலளிக்கப்படவில்லை.

**இலங்கை சுங்கத்தின் கருத்துத் தெரிவிப்பு**

**அவதானிப்பு (3.2.1 பந்தி)**

" இச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்காக 2015.12.23 ஆம் திகதி டீ.ஓ.பீ.எல். 1048 இன் மூலம் திணைக்களக் கட்டளை ஒன்று விடுக்கப்பட்டது. இதன் படி, இறக்குமதியாளருக்கு இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் அங்கீகாரத்திற்காக விடுவிக்கப்பட்ட டின் மீன்களின் அளவு தொடர்பான கண்காணிப்பு முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது."

**இலங்கை தர நிர்ணய கட்டளைக் நிறுவனத்தின் கருத்துத் தெரிவிப்பு**

**அவதானிப்பு (3.2.2 பந்தி)**

தாமதமின்றி மாதிரிகள் பெற்றுக்கொள்ளல்

" நாடெங்கிலும் இறக்குமதி செய்யப்படும் டின் மீன்களின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்கையில் இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தில் தாமதங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் பின்வரும் காரணங்களால் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன.

- பொருட்களை இறக்குவதில் தாமதம்

- இறங்குதுறைகளுக்கு பொருட்களைக் கொண்டுவரும் கொள்கலன்களை வைப்பது தொடர்பாக ஏற்படும் தாமதங்கள்

- இறக்குமதியாளர்களின் தாமதங்கள்

- பெரும்பாலான இறக்குமதியாளர்கள் பொருட்களின் இருப்பு கிடைக்கப்பெற்ற நாளாக வார்நாமத்தில் குறிப்பிடப்பட்ட நாளைக் குறிப்பிடுகின்றனர். எவ்வாறெனினும், அத் திகதி பொருள் இருப்பு துறைமுகத்திற்கு வந்தடைந்த உண்மையான திகதியல்ல."

**நிராகரிக்கப்பட்ட டின் மீன் இருப்பு தொடர்பாக சுங்கத்திற்கு அறிவிப்பதிலான தாமதம்**

" மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற டின் மீன் இருப்பு தொடர்பாக இலங்கைச் சுங்கத்திற்கு அறிவிப்பதில் தாமதங்கள் பின்வரும் காரணங்களால் நேர்ந்துள்ளது.

i. பரீட்சிக்கப்பட்ட மாதிரி வெற்றியடையாத சந்தர்ப்பங்களின் போது இரண்டாவது மாதிரியையும் பரீட்சிப்பதற்கான வசதி இறக்குமதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறக்குமதியாளரின் பால் உள்ளதுடன் அவ்வாறு பரீட்சிக்குமாறு இறக்குமதியாளரால் இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்திற்கு அறிவிப்பதிலான தாமதம்.

ii. ஆகையால் அத்தகைய மாதிரிப் பரிசோதனைகளுக்காக குறிப்பிடத்தக்க காலம் கடத்தல்.

iii. பொருள் இருப்புகள் தொடர்பாக தீர்மானங்கள் எடுத்தல் தரங்களில் குறிப்பிடப்பட்ட பரிசோதனைகள் சிலவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படல் மற்றும் சில பரிசோதனைகளை நிறைவேற்றுவதற்காகக் குறிப்பிடத்தக்க காலம் எடுத்தல்.

iv. கொள்கலன்களில் இடப்பட்ட டின் மீன்களில் பொருட் இலக்கம் அச்சிடப்படாத சந்தர்ப்பங்கள் பல அவதானிக்கப்பட்டதுடன் இதனால் அவற்றின் பொருள் விபரத் தாளுடன் இணங்கியிருக்கவில்லை.

v. தேவைப்பாட்டின் படி, மீள மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு உற்பத்திகள் இன்மை.”

## 3.3 கைவிடப்பட்ட கொள்கலன்கள் பிரசித்த ஏலவிற்பனையில் விற்பனை செய்தல்

இறக்குமதி செய்யப்பட்ட உணவு இறக்குமதியாளர்களால் விடுவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் இலங்கை சுங்க நிறுவகத்தின் மத்திய விற்பனைகள் (கைவிடப்பட்ட பொருட்கள்) பிரிவிற்கு உணவுப் பொருட்களும் மருந்துப் பொருட்கள் பரிசோதகர்களால் பரீட்சிக்கப்பட்டு அவ் உணவுப் பொருட்கள் மனித நுகர்விற்குப் பொருத்தமானதாயின் அவற்றை விற்பனை செய்வதற்காக சந்தைக்கு விநியோகிக்கப்படும்.

2013 சனவரி 21 ஆம் திகதி கப்பலில் ஏற்றப்பட்ட 03 கொள்கலன்கள் (SHLU 2137860 , SHLU 2009597, SHLU 2006427) துறைமுக வளாகத்தில் கைவிடப்பட்டிருந்ததுடன் இவற்றில் 02 கொள்கலன்களில் காணப்பட்ட 26,138 கிலோ கிராம் பெரிய வெங்காயம் (1867 ஒ 14 கி.கி. பொதிகள்) நுகர்விற்கு பொருத்தமற்றவை எனவும் சுங்க அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் அழிக்குமாறும் 2013 சனவரி 29 ஆம் திகதி LD/S/SAGT/2013/01/PC-07 ஆம் இலக்கமிடப்பட்ட கடிதத்தின் மூலம் சுங்க பிரதிப் பணிப்பாளர் கட்டளையிட்டிருந்தார். 2013 சனவரி 30 ஆம் திகதி கைவிடப்பட்ட பொருட்கள் பிரிவின் மூலம் விநியோகிக்கப்பட்ட கடிதத்தின் படி, ஒரு கிலோ கிராம் ரூபா 30 படி பகிரங்கமாக விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் இருப்புகள் பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**அறிவிப்பு**

i. அழிக்கப்பட வேண்டிய உணவுப் பொருள் இருப்பு சந்தையில் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படுவதன் மூலம் மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற உணவைச் சந்தைக்கு விநியோகித்தல்.

ii. குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படும் பெரிய வெங்காயம் சிற்றுண்டி (short eat) தயாரிக்கையில் பயன்படுத்தப்பட்டு குறைந்த விலையில் பாடசாலைகள், பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலைகளிற்கும் பொதுச் சந்தையிலும் விற்பனை செய்யப்படுவதற்கு இடமளித்தல்.

**பரிந்துரை**

மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களை அழிப்பதற்கான கட்டளைகளை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் இருந்து அதனை அழித்ததாகக் கண்காணிப்பு உத்தியோகத்தரின் கையொப்பத்துடனான ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

**இலங்கை சுங்கத்தின் கருத்துத் தெரிவிப்பு**

**அவதானிப்பு (3.3 பந்தி)**

பதிலளிக்கப்படவில்லை.

## 3.4 உணவுப் பொருட்களின் மாதிரியைப் பெற்றுக்கொள்ளல், பரிசோதித்தல் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பித்தல்

### 3.4.1 மாதிரியைப் பெற்றுக்கொள்ளல்

1980 இன் 26 ஆம் இலக்க உணவுப் பொருள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஏதேனும் உணவுப் பொருளிற்காக ஓர் தரம் நிர்ணயிக்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் அவ் உணவுப் பொருள் அதிகாரச்சட்டத்தின் கீழ் அவ் உணவுப் பொருள் வகைகளின் நிலையை மதிப்பிடுவதற்காக 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589∴34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை தரங்களைப் பின்பற்ற வேண்டும்.

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே 145,912 மெட்ரிக் தொன் மற்றும் 168,874 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயமும் முறையே 110,823 மெட்ரிக் தொன் மற்றும் 123,204 மெட்ரிக் தொன் உருளைக் கிழங்கும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. பெரிய வெங்காயத்திற்காக உரிய

இலங்கை தர இல. 1224 மற்றும் உருளைக் கிழங்கிற்கு உரித்தான இலங்கை தர இல. 1217 இல் குறிப்பிடப்பட்ட பொது தேவைப்பாடுகளின் படி, பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு போன்ற இரு உணவுப் பொருட்களிலும் பூச்சிகொல்லியின் அளவு இலங்கை தர இல. 910 இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையை மீறியிருத்தலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது குறித்து உறுதிப்படுத்தப்படுவதற்காக இவ் உணவுப் பொருட்கள் ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

எவ்வாறெனினும், 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு தொடர்பாக பூச்சிகொல்லியின் அளவு எல்லை மீறப்பட்டுள்ளதா என்பது குறித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிற்கு அல்லது கொழும்பு நகர இரசாயனப் பகுப்பாய்வாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமைக்கு இறக்குமதி உணவுப் பொருள் பரிசோதனைப் பிரிவால் அத்தகைய பரிசோதனைகள் செய்யப்படுவதற்கான மாதிரிகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரித்தாகப் பேணப்படும் பதிவேட்டில் பரிசோதிக்கையில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 3.4.2 ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தாமை

இலங்கைக்கு பெருவாரியாக இறக்குமதி செய்யப்படும் மற்றும் இலங்கை மக்கள் பெருமளவில் நுகரும் உணவுப் பொருட்களான பருப்புகளில் நுகர்விற்கு ஏற்ற நிலை பரிசோதிக்கப்படுவதற்காக மாதிரிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

பருப்பு தொடர்பாக உரிய உணவு தரமாக இலங்கை தர இல. 896 ஆகும். உரிய தரத்தின் இணக்கம் குறித்து பரிசோதிப்பதற்காக மாதிரிகளைப் பெற்றுக்கொள்கையில் மாதிரி அடங்கியுள்ள இருப்புடனான கொள்கலனில் மேற்பகுதி கீழ்ப்பகுதி மற்றும் நடுப்பகுதி என மூன்று பகுதிகளும் பிரதிநிதித்துவமாகும் வகையில் பெறப்பட்டு அதனை நன்றாகக் கலந்து மாதிரியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு குறித்த ஈரலிப்பு நிலையில் உள்ளதா, எதிர்பார்க்கப்பட்ட நிலையைப் பார்க்கிலும் வேறு பொருட்கள் உள்ளனவா, சேதமடைந்த மற்றும் உடைந்த பருப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா எனவும் உறுதிப்படுத்தப்படுவதற்காக உரிய தரத்தின் 5.5 ஆம் பந்தியின் படி

ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே 113,993 மெட்ரிக் தொன்களும் 150,889 மெட்ரிக் தொன்களுமாக இலங்கைக்கு சிவப்புப் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் பரிசோதனைப் பிரிவின் ஆய்வுகூடப் பரிசோதனைக்காக மாதிரிகள் அனுப்பிவைக்கப்படுவது தொடர்பாகப் பேணப்படும் பதிவேட்டைப் பரிசோதிக்கையில் அவை இத் தரத்திற்கு இணங்கும் நிலையில் உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஒரு சந்தர்ப்பத்தின் போது மாத்திரமே ஆய்வுகூடப் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.3 கதிர் வீச்சுச் சோதனைக்காக உணவுப் பொருள் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல்

இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் பரிசோதனைப் பிரிவினால் பரிசோதனைக்காக உணவுப் பொருள் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அவை உரிய ஆய்வுகூடத்திற்கு சமர்ப்பிக்கப்படுவது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டன.

அ. கதிரியக்கப் பொருளின் மூலம் சேதம் நேர்ந்துள்ளதா என பரீட்சிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் பரிசோதனைப் பிரிவால் உணவுப் பொருட்கள் அணுசக்தி அதிகாரசபைக்கே சமர்ப்பிக்கப்படுகின்றன. டின்னில் அடைக்கப்பட்ட மீன்களின் மாதிரிகள் அணுசக்தி அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படுகையில் டின் மீன்களின் வியாபாரப் பெயர் உள்ளடக்கப்பட்ட பதிவேட்டுடன் சமர்ப்பிக்கப்படுவதாகவும் முத்திரையிடப்பட்டு மாதிரி இலக்கங்கள் குறிப்பிடப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக இறக்குமதியாளர்களின் பிரதிநிதியாலேயே கொண்டுசெல்லப்படுவதும் அவதானிக்கப்பட்டது. இச் செயற்பாட்டு நடைமுறையின் கீழ் உரிய மாதிரிகளின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டமையால் உரிய இறக்குமதியாளரை இனங்காண்பதற்கு இயலுமாவதால் மாதிரிகளின் முடிவு பக்கச்சார்பின்றி சமர்ப்பிக்கப்படுவதனை கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) 25 கி.கி. பொதிகளில் அடைக்கப்பட்ட பால்மாவில் ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கான மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அவை உரிய வார்ப் கிளாக்கால் ஆய்வுகூடங்களிற்குக் கொண்டு செல்லப்படுவதும் அவர்களால் கொண்டுசெல்லப்படும் பொதிகளில் இருந்தே மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்படுவதும் அவதானிக்கப்பட்டது.



(வார்ப் கிளாக்கால் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது)

(இ) ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப்படும் மாதிரிகள் தொடர்பாக ஆய்வுகூட அறிக்கைகள் உணவு இருப்பை மீட்பதற்கு அத்தியாவசியமானதுடன் இவ் அறிக்கை காலதாமதமின்றி இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் பரிசோதனைப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதா என பரீட்சிக்கையில் 2013 யூலை 20 ஆம் திகதி முதல் 2013 செப்தெம்பர் 10 ஆம் திகதி வரை தனியார் ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த 469 சீனி மாதிரிகளுக்கு உரித்தாக எவ்வித அறிக்கையும் கணக்காய்வுப் பரிசோதனைத் தினமாகிய 2013 ஒக்டோபர் 11 ஆம் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிராமை அவதானிக்கப்பட்டது. மேலும் பால் மா தொடர்பாக டீ.சீ.டீ பரிசோதனைக்காக 2013 ஆகஜ்ட் 28 ஆம் திகதி முதல் திசெம்பர் 06 ஆம் திகதி வரையான காலத்தின் போது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்படும் பால்மா மாதிரிகளில் 23 மாதிரிகளுக்கு உரித்தான அறிக்கை கணக்காய்வுப் பரிசோதனைத் தினமாகிய 2014 பெப்ரவரி 05 ஆம் திகதி வரையிலும் பெறப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. க்டோபர் 11 ஆம் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிராமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்குறித்தவாறு அறிக்கை தாமதமாதல், உணவுப் பொருள் இருப்பை விடுவித்தலில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமானதுடன் இது குறித்த உணவுப் பொருளின் தரத்திற்கும் தாக்கமளிக்கும் காரணி என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உணவு வகை, அவற்றின் நுகர்விற்கு ஏற்ற நிலையில் நிர்ணயித்தலிற்காக எந்த நிறுவகத்தில் பரிசோதனை முறைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என இலங்கை சுங்கத்தால் தீர்மானிக்கப்படுவதுடன் குறித்த பரிசோதனை அறிக்கைகளின் முடிவுகளின் அடிப்படையில் பொருட்கள் சந்தையில் வழங்கப்படுவதற்கான அனுமதி வழங்கப்படுவது அல்லது வழங்கப்படாமை தீர்மானிக்கப்படும்.

அப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் பரிசோதனைப் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்ற மற்றும் அவர்களால் மாதிரிகள் கொண்டுவரப்பட்டு கதிர்வீச்சுப் பரிசோதனைகளுக்காக அணுசக்தி அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட பால்மா மற்றும் டின் மீன்களுக்கு உரித்தான 2012 ஆம் ஆண்டிற்காக 39 உம் 2013 ஆம் ஆண்டிற்காக 83 ஆய்வுகூடப் பரிசோதனை அறிக்கைகள் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 17 ஆம் திகதி வரையிலும் குறித்த இறக்குமதியாளர்களால் அணுசக்தி அதிகாரசபையிடம் இருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இவ் உணவுப் பொருள் இருப்பு விடுவிக்கப்பட்டமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இலங்கை சுங்கத்திற்கு எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அப் பொருட்களின் இருப்பு இறக்குமதியாளர்களால் விடுவிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4.4 தெரிவுப் பரிசோதனை அறிக்கை விநியோகிக்கப்படல்

இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒருகொடவத்தையில் உள்ள கொள்கலன் இறங்குதுறையில் 2013 யூலை 20 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 06 ஆம் திகதி வரை பால்மா 2,098,186 கி.கி இல் 34 மாதிரிகள் மருத்துவ பரிசோதனை

உள்ளடங்கிய ஏனைய பரிசோதனை நிறுவகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 05 ஆம் திகதி வரையிலும் அம் மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) மேற்குறித்த உணவுப் பொருட்கள் 06 மாதங்களுக்கும் மேலான காலமாக மாதிரி அறிக்கை கிடைக்கப்பெறும் வரை தனியார் களஞ்சியங்களில் வைத்துக்கொள்ளப்பட்டு அவை காலம் கடப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**அறிவிப்பு**

i. மாதிரிகள் பெறப்படல் மற்றும் அவற்றைப் பரீட்சிப்பதற்காகச் சமர்ப்பிக்கையில் ஏற்படும் சில நலிவுகள் காரணமாக கூடிய நம்பிக்கைக்குரிய பரிசோதனையின் விளைவைப் பெற்றுக்கொள்வதற்கு இடையூறுகள் நிலவுதல்.

ii. மாதிரிப் பரிசோதனை அறிக்கைகளின் தாமதம் காரணமாக உணவுப் பொருட்கள் காலாவதியாகும் அபாயம் அதிகரித்தமை.

iii. இறக்குமதியாளர்களுக்கு தெரிவுப் பரிசோதனை அறிக்கைகளின் விளைவு தொடர்பாக கருத்திற்கொள்ளாது செயற்படுவதற்கு இடமளித்தல்.

iv. தெரிவுப் பரிசோதனை அறிக்கைகள் உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்றிராமையால் தரமான உணவுப் பொருட்கள் சந்தைக்கு அனுப்பிவைக்கப்படுவதனை சான்றுறுதியளிப்பதற்கு முடியாதிருந்தமை.

**பரிந்துரை**

i. பால் மா, டின்னில் அடைக்கப்பட்ட மீன் போன்ற உணவுப் பொருட்களின் தெரிவுப் பரிசோதனைக்காகச் சமர்ப்பிக்கையில் இறக்குமதியாளர்களின்.˙. உற்பத்தியாளர்களின் அடையாளத்தை இனங்காண முடியாத வகையில் பெயர்ச் சுட்டி அகற்றப்பட்டு உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவி மாத்திரம் தெளிவாக இனங்காணக்கூடியவாறான இரகசியக் குறியீட்டு முறை பயன்படுத்தப்பட்டு ஆய்வுகூடப் பரிசோதனைகளிற்காக சமர்ப்பித்தல்.

ii. உணவுப் பொருட்களின் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்படுகையில் உரிய வாப்பு இலிகிதர்கள் ஈடுபடுவதற்கு இடமளிப்பதற்குப் பதிலாக தற்செயலாகவும் நம்பகரமாகவும் மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களின் ஈடுபாட்டை அதிகரித்தல்.

**சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கருத்து**

**அவதானிப்பு (3.4.1 மற்றும் 3.4.2 பந்தி)**

“ இலங்கைக்கு கூடுதலாகத் தருவிக்கப்படும் பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு பரிசோதனை தொடர்பாக மாதிரியிடல் மேற்கொள்ளப்படாமை குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்கள் பரீட்சிக்கப்படுகையில் மேற்குறித்த உணவுப் பொருட்கள் குறைந்த அபாயகரமான உணவுப் பொருள் வகைக்குள்ளேயே உள்ளடங்கும். (low risk food/ Raw food)

இத்தகைய உணவுப் பொருட்கள் தொடர்பான மாதிரியிடலில் சர்வதேச ரீதியாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்படுவதில்லை. பரிசோதிக்கையிலும் மாதிரியடலின் போதும் உயர் அபாயமுள்ள உணவுப் பொருட்களுக்கே கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது. (Milk and Milk product/ Meat and Meat product/ Fish and Fish product/ Eggs etc.)

உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற உணவுப் பொருட்கள் குறிப்பாக வெற்றுக் கண்ணால் பார்வையிட்டு பரீட்சித்து தரம் குறித்துத் தீர்மானத்திற்கு வர முடியும். சர்வதேச ரீதியாகவும் இம் முறையே பின்பற்றப்பட்டிருந்தது.

**அவதானிப்பு (3.4.3 பந்தி)**

“ இது இறக்குமதியாளர்களின் முகவர்களின் மூலம் ஒப்படைக்கப்படுவது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இம் மாதிரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பிரிவின் உத்தியோகத்தரால் முத்திரையிடப்பட்டு அடைக்கப்பட்டு அனுப்பிவைக்கப்படுவதுடன் பொறுப்பேற்கப்படும் சந்தர்ப்பத்தின் போத அம் முத்திரை மாறுபட்டிருக்குமாயின் பொறுப்பேற்கப்படமாட்டாது. இவ்வாறே முத்திரை மாற்றப்பட்டுள்ளமை குறித்து இது வரையில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறே, இம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்படுகையில் குறித்த பரிசோதனைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியமையால் உரிய தரப்பினர் இதன் போது கலந்துகொள்வர். (இம் மாதிரி கண்காணிப்பு மாதிரியாகும்.)"

**இலங்கை சுங்கத்தின் கருத்துரை**

**அவதானிப்பு (3.4.3 பந்தி)**

" மாதிரி பெற்றுக்கொள்ளப்படும் செயற்பாட்டில் வாப்பு இலிகிதரின் செயற்பாட்டை நீக்குவது பௌதீக ரீதியாக மேற்கொள்ள முடியாததுடன் குறித்த மாதிரியைச் சேகரித்து குறித்த நிறுவகத்திற்கு ஒப்படைக்கையில் பாதுகாப்பாக பொதிகளில் இடப்பட்டு ஒப்படைக்கும் முறைமையாக முத்திரையிடக் கூடிய பொதிகள் (தற்போது சுங்கத் திணைக்களத்தில் பயன்படுத்தப்படும் Sealed Pouch) பயன்படுத்தப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. மாதிரியின் பரிசோதனை அறிக்கை விரைவில் சுங்கத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்ளப்படுவதற்காக குறித்த ஆய்வுகூடத்திற்கும் சுங்கத் திணைக்களத்திற்கும் இடையே Online System முறைமை ஒன்று ஏற்படுத்தப்படுவதன் மூலம் இத் தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும்."

## 3.5 உணவு ஆலோசனைக் குழுவின் பரிந்துரையும் தீர்மானமும்

### 3.5.1 உணவு ஆலோசனைக் குழுவின் செயற்பாடு

குழுவினால் 31 உணவு வகைகளுக்கான நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு உணவு அதிகாரச்சட்டத்தின் நிபந்தனை காலத் தேவைப்பாட்டின் படி, அவ்வப்போது திருத்தப்பட வேண்டிய போதிலும் உணவு இறக்குமதி தொடர்பாக சிக்கல் நிலை ஏற்பட்ட 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது சுவை மேம்பாட்டிற்காக மாத்திரமே திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இறுதி முடிவிற்கு வந்திராத 16 திருத்தங்கள் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.2 உணவு ஆலோசனைக் குழுவின் பரிந்துரையும் தீர்மானமும் செயற்படுத்தப்படல்

இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சகல உணவுப் பொருள் இருப்பும் உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதை அடுத்து இலங்கை சுங்கத்திற்கு விடுவிக்கப்படுகின்றது. மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவு தொடர்பாக சுங்கக் கட்டளை அதிகாரச்சட்டத்தின் படி செயற்படுமாறு இலங்கை சுங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக உணவுப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் மூலம் பின்தொடர் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாததுடன் மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள் இருப்பு தொடர்பான முக்கிய தகவல்கள் ( சுங்கப் பிரிவு, இறக்குமதி செய்யப்பட்ட திகதி, பொருட்கள் பற்றிய விபரம், பொருட்கள் பற்றிய விபரமும் இறக்குமதியாளர்களின் விபரமும்) மற்றும் தரவு முறைமை ஒன்றும் அப் பிரிவில் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 மேன்முறையீடு தொடர்பாக செயற்படும் நடைமுறை

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது உணவு ஆலோசனைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு தொடர்பாகத் தீர்மானம் எடுக்கையில் 03 மாதங்களிற்கும் 10 மாதங்களிற்கும் இடைப்பட்ட காலவீச்சில் தாமதம் நிலவிய 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.5.4 மேன்முறையீடு தொடர்பாக பின்பற்றப்படும் நடைமுறை

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் பரிசோதனைப் பிரிவின் மூலம் மனித நுகர்விற்காக பரிந்துரைக்கப்படாத உணவுப் பொருள் இருப்பு தொடர்பான மேல்முறையீடுகள், உணவுக் கட்டுப்பாடு நிர்வாகப் பிரிவிற்குக் கிடைக்கப்பெறுவதுடன் இவை உணவுப் பொருள் ஆலோசனைச் சபையால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் தொடர்பாக திருப்தியடையாது மீள இறக்குமதியாளர் தமது கோரிக்கையைச் சமர்ப்பித்திருந்தமையால் நேரும் கால தாமதம் குறித்த உணவுப் பொருட்களில் உள்ள தரத்தின் நிலையில் தாக்கம் செலுத்தும். அத்தகைய 09 மேன்முறையீட்டுச் சந்தர்ப்பங்களின் போது 2 தவணைகளுக்கும் 5 தவணைகளுக்கும் இடையிலான வீச்சின் போது மீளக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**அறிவிப்பு**

i. ஏற்படும் தாமதங்கள் உணவுப் பொருட்களில் உள்ள தரத்தில் தாக்கம் செலுத்துவதுடன் இறக்குமதியாளருக்கும் அனாவசியமாக இவ் இருப்பு களஞ்சியப்படுத்தப்பட நேர்வதால் மேலதிக செலவினத்தை ஏற்பதற்கு நேர்வதன் மூலம் அனாவசியமாக உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பதற்கு இடமளித்தல்.

ii. தரத்தில் குறைவான, சுகாதாரத்திற்கு அபாயகரமான உணவுப் பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

**பரிந்துரை**

i. மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருள் இருப்பு தொடர்பான அத்தியாவசியமான விபரம் மற்றும் அவை சந்தைக்கு விடுவிக்கப்படும் சகல விபரங்களும் அடங்கிய ஓர் பதிவேடும் அதற்கு உரித்தான ஆவணங்கள் அடங்கிய கோவை நாளதுவரையாகப் பேணப்பட்டு அத்தகைய உணவுப் பொருள் இருப்பு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களுக்காக நடவடிக்கை எடுத்தல்.

ii. உணவுப் பொருள் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்கள் (உதாரணம் :- இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகம், மருத்துவ பரிசோதனை நிறுவகம்) மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருள் தொடர்பாக தமது நிறுவகம் கண்டறியும் தகவல்கள் தொடர்பாகக் குழுவிற்கு அறவித்தல்.

iii. குழுவின் பரிந்துரை தொடர்பாக உணவுப் பொருள் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்கள் தாம் பிரதிநிதித்துவம் வகிக்கும் நிறுவகத்தின் உரிய பிரிவிற்கு அறிவுறுத்தல்.

**சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கருத்துத் தெரிவிப்பு**

பதிலளிக்கப்படவில்லை.

## 3.6 தனியார் களஞ்சியங்களில் இருந்து உணவுக் கொள்கலன்களை விடுவித்தல்

### 3.6.1 தனிப்பட்ட உத்தரவாதத்தில் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை

ஒருகொடவத்தையில் உள்ள கொள்கலன் இறங்குதுறையில் இலங்கைச் சுங்கத்தால் உணவுக் கொள்கலன்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு மாதிரிக்காகவும் மாதிரி அறிக்கைகள் வழங்கப்படும் வரை இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள் இருப்பை தமது தனிப்பட்ட களஞ்சியங்களில் வைத்துக்கொள்வதற்கு இறக்குமதியாளர்களிடம் இருந்து தனிப்பட்ட உத்தரவாதம் பெறப்பட்டிருந்தது. 2013 ஒக்டோபர் 22 ஆம் திகதிய தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது இறக்குமதியாளர்கள் தனிப்பட்ட உத்தரவாதத்தில் இருந்து விடுவிக்கப்படுவதற்கான முயற்சி எடுத்திராமையால் அவை நீண்ட காலமாக இலங்கை சுங்கத்திடம் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| மாதிரி அறிக்கை அனுப்பிய நிறுவகம் | மாதிரி அனுப்பிவைக்கப்பட்ட காலப்பகுதி | அனுப்பிவைக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | உணவு வகை |
|---|---|---|---|
| இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவகம் | 2012.12.26 முதல் 2013.06.17 வரை | 76 | ரின் மீன், பட்டர், பாம் எண்ணெய், மாஜரின், பழச் சாறு, சன்பிளவர் எண்ணெய், சிவப்பு சீனி, பால்மா |
| அணு சக்தி அதிகாரசபை | 2013.06.06 முதல் 2013.08.05 வரை | 29 | ரின் மீன், பால்மா, குளிரூட்டப்பட்ட மீன் |

இங்கு, தனிப்பட்ட உத்தரவாதத்தை இரத்துச் செய்திராத இறக்குமதியாளர்கள் தொடர்பில் இலங்கை சுங்கம் பின்தொடர் நடவடிக்கை எடுத்திராமை.

### 3.6.2 சுங்கப் பரிசோதனைக்காக உணவுப் பொருள் தனியார் கொள்கலன் இறங்குதுறைக்குக் கொண்டுசெல்லல்

இறக்குமதி செய்யப்படும் பல உணவுப் பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து கொள்கலன்களில் இடப்பட்டு கொழும்புத் துறைமுகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டதை அடுத்து சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இதுவரையில் கொள்கலன்களில் இடப்பட்டு இறக்குமதி செய்யப்படும் அனைத்தும் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்காக துறைமுகத்திற்கு வெளியே உள்ள தனியார் இடமான ஒருகொடவத்தை கொள்கலன் இறங்குதுறைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அங்கு சுங்கப் பரிசோதனையின் பின்னர் அவ் உணவுப் பொருட்கள் மனித நுகர்விற்குப் பொருத்தமானவை என்பது குறித்து பரிசோதிக்கப்படுவதற்காக உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதனையாளர்களின் பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டு அவை உரிய ஆய்வுகூடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அவ் உணவுப் பொருட்கள் நுகர்விற்குப் பொருத்தமானவையா என்பது குறித்து பரிசோதிப்பதற்காக இரண்டு மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதில் ஒரு மாதிரியை பரிசோதனைக்காக உரிய நிறுவகத்திற்கு அனுப்பி வைப்பதுடன் மற்றைய மாதிரி கொள்கலன் இறங்குதுறையில் உள்ள இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் பரிசோதனைப் பிரிவில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். எனினும், பெற்றுக்கொள்ளப்படும் சகல உணவுப் பொருட்களினதும் இரண்டாவது மாதிரி களஞ்சியப்படுத்தப்படுவதற்கான இட வசதிகள் இன்மையால் அவை அப் பிரிவில் பாதுகாப்பின்றி குவித்துவைக்கப்பட்டிருந்தன. இதன் படி,

i. மீன், மாஜரின் போன்ற குளிரூட்டியில் வைக்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் ஒரே குளிரூட்டியில் வைக்கப்படுவதனால் இரண்டாவது மாதிரிகளில் உணவுப் பொருட்களின் தரத்திற்கு தாக்கம் ஏற்படக்கூடும்.

ii. உணவுப் பொருள் மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டதை அடுத்து இது நுகர்விற்குப் பொருத்தமானதா என்பது குறித்து பரிசோதனை அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏறத்தாழ ஒரு மாதத்திற்கும் மேலான காலம் கடப்பது மற்றும் இக் களஞ்சியப்படுத்தும் முறை காரணமாக முதலாவது உணவுப் பொருள்

மாதிரிகளில் தவறு இருப்பின் மீள பரிசோதிப்பதற்காக உரிய உணவுப் பொருள் மாதிரியைத் தேடிக்கொள்வதற்கு சிரமம் ஏற்படுதல்.

iii. தனியார் நிறுவகங்கள் இறங்குதுறைக்கு வரும் சகல கொள்கலன்களுக்காகவும் இறக்குமதியாளர்களிடம் இருந்து வைத்துக்கொள்ளப்படும் காலத்திற்க ஏற்ப ஓர் கட்டணம் ஒன்று அறவிடுவதன் மூலம் ஓர் வருமானத்தை உழைத்துக்கொள்கின்றனர். அரசாங்கத்திடம் உள்ள கொள்கலன் இறங்குதுறை ஒன்று துறைமுகத்தில் இருப்பின் இதன் மூலம் பாரியளவு வருமானத்தை இலங்கை துறைமுக அதிகாசபைக்குப் பெற்றுக்கொள்ள முடியுமானதுடன் இறக்குமதியாளர்களுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களைத் தாமதமின்றி அவற்றை விடுவித்துக்கொள்வதற்கு முடியும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

**அறிவிப்பு**

i. மாதிரிகளுக்கு உரிய அறிக்கைகளை வழங்குவதற்கு முன்னர் உணவு சந்தைக்குச் செல்லும் வாய்ப்பு அதிகரித்தல்.

ii. மனித நுகர்விற்காக பொருத்தமற்ற உணவுப் பொருள் தொடர்பான நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பம் இன்மை.

iii. உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதனையாளர்களுக்கு வைத்துக்கொள்ளப்படும் இறக்குமதிப் பொருட்கள் சட்டரீதியாக இரண்டாவது இறக்குமதிப் பொருளின் பரிசோதனைக்குத் தேவையான போதிலும் அவை பாதுகாப்பின்றி குவித்து வைத்துக்கொள்ளப்படுகின்றது.

**பரிந்துரை**

i. இறக்குமதி உணவுப் பொருள் பரிசோதனைப் பிரிவிற்காக போதிய இடவசதியுடன் ஓர் இடமும் தேவையான பௌதீக வசதிகளும் வழங்கப்படுதல்.

ii. தனிப்பட்ட உத்தரவாதத்தை விடுவித்துக் கொள்ளாததன் காரணத்தை ஆராய்தல்.

iii. தனியார் களஞ்சியங்களில் வைத்துக்கொள்ளப்படும் உணவுப் பொருட் கொள்கலன்களின் பரிசோதனை அறிக்கை விநியோகிக்கப்படுவதற்கு முன்னர் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**இலங்கை சுங்கத்தின் கருத்துத் தெரிவிப்பு**

**அவதானிப்பு (3.6.1 பந்தி)**

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகத்திற்கோ அல்லது உணவுப் பரிசோதகரின் பரிந்துரையின் அடிப்படையில் இறக்குமதியாளரின் களஞ்சியத்திற்கு தனிப்பட்ட உத்தரவாதத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படுகையில் இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு ஆய்வுகூட பரிசோதனைக்காக நீண்ட காலம் எடுக்கப்படுகின்றது. இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகத்தின் பரிந்துரை இறக்குமதியாளருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த தருவித்தல் பொருளுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறின் அத் தருவித்தல் பொருளுக்காக வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட உத்தரவாதத்தை இரத்துச்செய்து பொருளை விடுவித்துக்கொள்ளும் பொறுப்பு இறக்குமதியாளருக்கு உரித்தானதாகும். இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகத்தின் அங்கீகாரம் நிராகரிக்கப்படுமாயின் இது குறித்து இலங்கை சுங்கத்திற்கு அறிவித்து அத் தருவிப்புப் பொருள் மீள் ஏற்றுமதி செய்யப்படுவதற்கோ அல்லது சேதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதை அடுத்து தனிப்பட்ட உத்தரவாதம் இரத்துச் செய்துகொள்ளும் பொறுப்பு இறக்குமதியாளருக்கு உரித்தானதாகும்.

இத் தனிப்பட்ட உத்தரவாதத்தைப் பின்தொடரும் நடவடிக்கை உரிய சுங்க அலுவகத்தின் பதவியணியின் பொறுப்பாகும்.”

இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாத தருவிப்புப் பொருட்கள் முறைப்படி மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான இறக்குமதியாளர்கள் தமது தனிப்பட்ட உத்தரவாதத்தை இரத்துச் செய்துகொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய இறக்குமதியாளர்களுக்கு உரிய

ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவித்து கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டின் நுகர்விற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பரீட்சிக்கப்பட்டதை அடுத்து இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகம் மற்றும் உணவுப் பொருள் பரிசோதகர்களின் அங்கீகாரம் அல்லது பரிந்துரையில் மாத்திரமே இறக்குமதியாளர்களின் களஞ்சியத்திற்கு விடுவிக்கப்படுகின்றது. அவ்வாறு விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்தின் போது அவற்றிற்காக தனிப்பட்ட உத்தரவாதம் இறக்குமதியாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும். இத் தருவிப்புப் பொருளிற்கான பின்தொடர் நடவடிக்கை இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவகத்தால் அல்லது உணவுப் பொருள் பரிசோதகரின் மூலம் மேற்கொள்ளப்படும்.

தனிப்பட்ட உத்தரவாதத்தின் அடிப்படையில் பொருட்களை விடுவித்திருந்த போதிலும், இது வரையில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படத் தவறும் மற்றும் இதன் படி தமது தனிப்பட்ட உத்தரவாதத்தை இரத்துச் செய்துகொள்ளத் தவறும் இறக்குமதியாளர்களுக்கு மீள அவ்வாறு தனிப்பட்ட உத்தரவாதத்தின் அடிப்படையில் பொருட்களை விடுவித்துக்கொள்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

தனிப்பட்ட உத்தரவாதப் பதிவேட்டை முறையாகப் பேணுவதற்கும் உரிய தருவிப்புப் பொருட்களிற்காக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**அவதானிப்பு (3.6.2 பந்தி)**

“ சகல கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகளும் துறைமுகத்திற்கு வெளியே உள்ள GL1, GL11, ஒருகொடவத்தை அல்லது HRC கொள்கலன் பரிசோதனைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த தருவிப்புப் பொருட்கள் பரிசோதிக்கப்படுவதற்கு உரித்தான ஆலோசனைகள் நீளமான அறையில் ஊடுருவல் பிரிவின் பிரதிச் சுங்கப் பணிப்பாளரால் வழங்கப்படுகின்றது.

மேற்குறித்த கொள்கலன் பரிசோதனைப் பிரிவு தனியார் பிரிவிற்கு உரித்தானதுடன் பொருட்கள் பரிசோதிக்கப்படுவதற்குத் தேவையான வசதிகள் இலங்கை சுங்கத்திற்கு அப் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளன.

சாதாரணமாக துறைமுகத்தின் வெளியேறும் இடத்தில் இருந்து ஒருகொடவத்தை கொள்கலன் இறங்குதுறைக்கு கொள்கலன் ஒன்று கொண்டு வரப்படுவதற்கு 30 நிமிடங்கள் செல்கின்ற போதிலும் வீதி நெரிசல் காரணமாக இக் காலம் நீடிக்கப்படக்கூடும். கொள்கலன்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் உணவுப் பொருள் மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ளும் நிறுவகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் பரிசோதனைப் பகுதிகளிற்குக் கொண்டுசெல்லப்படுகின்றன."

"ஒருகொடவத்த யார்ட்டில் உணவுப் பரிசோதனைப் பிரிவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளமையால் இதற்குத் தேவையான வசதிகளை அதே பிரிவின் மூலமே பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இலங்கை துறைமுக அதிகாரசபையால் சில காலங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொள்கலன்களுக்கான சேவை வழங்கல் தொடர்பாக குற்றச்சாட்டு கிடைக்கப்பெற்றதன் காரணத்தாலும் சுங்கச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதில் உள்ள சிரமங்கள் காரணமாகவும் தனியார் கொள்கலன்கள் பரிசோதனைப் பகுதி பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் துறைமுக வளாகத்தில் அரசாங்கத்திற்கு உரித்தான கொள்கலன் யாட் ஒன்று இருக்கவில்லை.

எதிர்காலத்தில் தனிப்பட்ட உத்தரவாதத்திற்காக முறையான மாதிரிப் படிவம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு தருவிப்புப் பொருளை முறையாக பின்தொடர்வதற்கான செயற்பாட்டிற்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படல், தனிப்பட்ட உத்தரவாதப் பதிவேடு மற்றும் உரிய ஆவணங்கள் முறையாகப் பேணி அவற்றை நாளாந்தம் பரீட்சித்து பின்தொடர்நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பொருள் பரிசோதனைச் செயற்பாடுகள் "புளுமென்டல்" எனும் பகுதியில் பொருட் பரிசோதனைப் பிரிவொன்றை நிர்மாணிப்பதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதை அடுத்து கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது."

## 3.7 ஆய்வுகூட நடவடிக்கைகள் பரீட்சிப்பு

இலங்கையில் உணவுப் பொருட்களில் இரசாயனக் கொள்ளளவு மற்றும் நுண்ணுயிர்களின் உள்ளடக்கத்தைப் பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச நிறுவகங்களிற்கு உரித்தாக ஆய்வுகூடம் முக்கிய

செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அச் செயற்பாடுகளின் முக்கியத்துவம் காரணமாக அவை நவீன தொழில்நுட்ப முறைகளின் படி, சர்வதேச நிலையில் செயற்பட வேண்டியமை மற்றும் அந் நிறுவகங்களால் விநியோகிக்கப்படும் பரிசோதனை அறிக்கைகளின் படி முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படுவதனால் அவற்றின் அறிக்கைகளின் நம்பகத்தன்மை தொடர்பாக திருப்திகொள்வதற்கு இயல வேண்டும். இந் நிறுவகங்களின் செயற்பாடு தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகக் காணப்பட்டது.

### 3.7.1 அங்கீகரிக்கப்பட்ட இரசாயன பகுப்பாய்வாளர்

1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் உணவு அதிகாரச்சட்டம் மற்றும் இதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கட்டளைகளின் செயற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட இரசாயன பகுப்பாய்வாளர் அரச இரசாயன பகுப்பாய்வாளராவார். அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பரிசோதனைப் பிரிவிற்கு, அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் மாதிரிகளில் முறையே 163 உம் 10 மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டு பரீட்சிக்கப்படக் கூடியதாக இருந்தன.

(ஆ) அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் சீனியில் உள்ளடங்கியுள்ள சில கன உலோகங்களின் பகுப்பாய்வு வசதிகள் இல்லாத காரணத்தால் சீனியில் கார உலோகங்கள் உள்ளதா என பரீட்சித்துப் பார்ப்பதற்காக இறக்குமதியாளர்களுக்கான உணவு பரிசோதனைப் பிரிவால் 2013 யூலை 20 ஆம் திகதி முதல் 2013 செப்தெம்பர் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது 450 சீனி மாதிரிகளுக்கு மேலான அளவு தனியார் ஆய்வுகூடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) மாதிரிப் பரிசோதனைக்காக ஆய்வுகூடத்திற்கு இறக்குமதியாளர்களால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் சீனியில் அடங்கியுள்ள கன உலோகப் பரீட்சிப்பிற்காக ஒரு மாதிரிக்கு ரூபா 12,500 படி, ரூபா 5,625,000 தொகை 2013 யூலை 20 ஆம் திகதி முதல் 2013

செப்தெம்பர் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக மாத்திரம் மேற்குறித்த தனியார் ஆய்வுகூடத்திற்கு இறக்குமதியாளர்களால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளபட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளராக அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு பகுப்பாய்வு வசதிகள் இன்மையால் அவர்களால் உணவு மாதிரிகள் பரிசோதிக்கப்படுவதற்கு நிராகரித்தமையால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சீனி தொடர்பாக அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்கத் தவறியமைக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இதற்கு மேலதிகமாக கடந்த காலத்தின் போது பாரிய பதட்டத்தை ஏற்படுத்திய பால்மாவில் அடங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்ட டீ.சீ.டீ. (Dicyandiamide) தொடர்பான சிக்கலின் போது குறித பகுப்பாய்வு வசதிகள் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் இல்லாததன் காரணமாக தனியார் பரிசோதனை நிறுவகம் ஒன்றிடம் அனுப்பிவைக்கப்பட நேர்ந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் மே 30 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது மாத்திரம் டீ.சீ.டீ. பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக 160 மாதிரிகள் மாத்திரம் இந் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் இப் பகுப்பாய்வு வசதிகள் காணப்பட்டிருப்பின் இறக்குமதியாளர்களால் மாதிரிகளுக்கு ரூபா 29,000 படி செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,640,000 தொகை அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) இந் நிலை ஊரிய ஆய்வுகூடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் ஆய்வு அறிக்கைகளின் நம்பகத்தன்மை தொடர்பான சிக்கல் நிலையை ஏற்படுத்தியிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் அல்லாதவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் அறிக்கைகள் சட்ட விடயங்களில் கட்டுப்படுத்தக்கூடிய காரணியாக அமையும் என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.7.2 இலங்கை தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவனம்

இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் உணவுப் பரிசோதனை செய்யப்படும் ஆய்வுகூடத்தில் உணவு இறக்குமதிப் பொருட்களின் பரிசோதனைக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் செயற்பாடு திருப்திகரமாக இருந்த போதிலும் குறித்த பராமரிப்பு, சேவையிடல் போன்ற செயற்பாடுகள் முறைப்படி உரிய கால நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக அடிக்கடி பழுதுபார்க்கப்பட நேர்ந்துள்ளது.

மேலும், ஆய்வுகூடத்தில் உள்ள HPLC சிஸ்டம் எனும் பெயர் கொண்ட உபகரணத்திற்கு மேலதிக உதிரிப்பாகங்கள், மாற்றுவதற்கு அவ் உதிரிப்பாகங்களின் உற்பத்தியாளர்களும் விநியோகத்தர்களும் தற்போது இன்மையால் திருத்தப்படாது பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட சொத்தாக வைக்கப்பட்டிருந்தது.

இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் பதவியணியில் 06 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளனர். எனினும், 1996 ஆம் ஆண்டில் 13 உத்தியோகத்தர்கள் கடமையாற்றியிருந்தமை கண்டறியப்பட்டது. தற்போது இவ் வெற்றிடத்திற்காக இரசாயன விஞ்ஞானத்தை பாடமாகக் கொண்டு கற்ற பட்டதாரி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆய்வுகூடத்திற்கு தேவைப்பட்டுள்ளனர். இவ் வெற்றிடத்தை நிரப்புவதன் மூலம் மேலதிக மாதிரிப் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்வதற்கும் அறிக்கை வழங்குவதற்கும் இயலும் என்பது அவதானிக்கப்பட்டது.

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை சுங்கத்தால் மாதிரிப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்திற்கு முறையே 3,348 உம் 4,114 உமாக IEI மற்றும் EIS எனும் இரு பிரிவுகளுக்காக வழங்கப்பட்டிருந்தன. எனினும், 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போதான முன்னேற்ற அறிக்கைகளின் படி, இரு பிரிவுகளில் இருந்தும் வழங்கப்பட்டிருந்த மாதிரி அறிக்கைகளின் எண்ணிக்கை முறையே 1,691 ஆகவும் 2,046 ஆகவும் மாத்திரம் காணப்பட்டன. மேலும், பரிசோதிப்பதற்காகக் கிடைக்கும் மாதிரிகளின் எண்ணிக்கையில் ஒரு பகுதி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (ITI) அனுப்பிவைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருந்தன.

### 3.7.3 மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம்

அடிக்கடி மாதிரிகள் கிடைக்கப்பெறும் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொள்ளும் இவ் ஆராய்ச்சி நிலையத்தில் பின்வரும் குறைபாடுகள் தொடர்பாக அப் பகுதியின் தலைவரால் 2013 ஆம் ஆண்டின் போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் 2014 சனவரி 31 ஆம் திகதி வரையிலும் அவை பூர்த்திசெய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுனர்களின் பற்றாக்குறை.

ii. Endotoxin assay dialysis fluid மற்றும் Establishment of Molecular detection methods போன்ற பரிசோதனைகளை மேற்கொள்ளப்படாமை.

iii. ஆய்வுகூடத்தின் இடவசதி போதாமை.

iv. ஆய்வு அறிக்கைகள் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் பற்றாக்குறை.

v. அலுவலக உபகரணங்கள் பற்றாக்குறை.

**அறிவிப்பு**

i. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உணவைப் பரிசோதிப்பதற்குத் தேவையான வசதிகள் ஆய்வுகூடங்களில் இன்மையால் நுகர்வோருக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்களை சந்தைக்கு விநியோகிக்கும் அபாயம் அதிகரித்தல்.

ii. ஆய்வுகூடங்களில் நிலவும் வளங்களின் பற்றாக்குறை காரணமாக மாதிரி அறிக்கைகள் தாமதமாகும் போக்கு அதிகரித்தல்.

**பரிந்துரை**

i. தேவைப்பாட்டின் படி, தொழில்நுட்ப வல்லுனர்களை ஆட்சேர்த்தல்.

ii. மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் உணவுப் பொருள் ஆய்வுகூடத்தில் பின்வரும் ஆய்வுகூட ஆராய்ச்சி வசதிகளை ஏற்படுத்துதல்.

*	Endotoxin assay dialysis fluid
*	Establishment of Molecular detection methods

iii. மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் உணவுப்பொருள் ஆய்வுகூடத்தைப் பராமரிப்பதற்காக போதிய இடவசதிகளுடனான ஓர் இடத்தை வழங்குதல்.

iv. மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் உணவுப்பொருள் ஆய்வுகூடத்திற்குத் தேவையான அலுவலக உபகரணங்களை வழங்குதல்.

**சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கருத்துத் தெரிவிப்பு**

பதிலளிக்கப்படவில்லை.

**இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம்**

**அவதானிப்பு (3.7.1 பந்தி)**

“ உணவுப்பொருள் தொடர்பான பரிசோதனையை மேற்கொள்வதற்காக இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் உணவுப்பொருள் ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான உபகரணங்களில் பழைமைவாய்ந்த எனினும் தொடர்ந்து பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய உபகரணங்கள் மென்மையான செயற்பாட்டில் இல்லாத போதிலும் அகற்ற முடியாத நிலையில் உள்ளன.

இவ் உபகரணங்களின் செயற்திறனை அதிகரிப்பதற்காக முறையான பராமரிப்பும் உரிய நேரத்தில் மேலதிக உதிரிப் பாகங்களைப் பொருத்தும் தேவைப்பாடு இருந்த போதிலும் அவை கட்டளையிடப்பட்டு கொள்வனவு செய்யப்படுவதற்கு நீண்ட நாட்கள் கடந்திருந்தன.

மேலும் திருத்த முடியாத எச்பீஎல்சீ போன்ற உபகரணங்கள் அகற்றப்பட்டு இதற்குப் பதிலாக புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளன.

உணவு ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்படும் வரை புதிய உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுவதற்கு அவசியம் இல்லை.

இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் இயலளவு முழுமையடைந்திருந்த சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வுகூட சேவைகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் புதிய ஆய்வுகூடக் கட்டிடத் தொகுதியின் ஸ்தாபிப்பிற்கான தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டதை அடுத்து ஓர் புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.8 உணவுப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவு

உணவுப் பொருள் ஆலோசகர் குழுவின் கட்டளை மற்றும் பரிந்துரையைச் செயற்படுத்துவதற்காகவும் பிரதான உணவு அதிகாரியின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.8.1 பிரதான உணவு அதிகாரி

1980 இன் 26 ஆம் இலக்க உணவுப் பொருள் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான உணவு அதிகாரி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களாவார். உணவு மற்றும் சுகாதாரத் துறை ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய விடயமான போதிலும், சுகாதார சேவையில் பாரிய நோக்கொல்லையைக் கொண்ட செயற்பாட்டை மேற்கொள்ளும் இப் பதவிக்கு அவ்வாறே பாரிய நோக்கெல்லையுடனான உணவுத் துறை ஒப்படைக்கப்படுவதன் மூலம் பிரதான உணவு அதிகாரியின் பொறுப்பும் செயற்பாடும் சில்லடைந்துள்ளது.

### 3.8.2 உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகர்களின் செயலாற்றல்

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் பரிசோதனைப் பிரிவிற்காக 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது எட்டு பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் கொள்கலன்கள் அதிகளவில் பரீட்சிக்கப்படுவதற்காக அனுப்பிவைக்கப்படும் ஒருகொடவத்தையில் உள்ள கொள்கலன் இறங்குதுறையில் ஏறத்தாழ 2000

கொள்கலன்கள் அளவில் கிடைக்கப்பெறுவதுடன் அப் பிரிவிற்காக மூன்று பரிசோதகர்கள் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மாதிரிகள் பெறப்படல், பௌதீக பரிசோதனை அறிக்கை வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஒரு பரிசோதகருக்கு ஒரு நாளுக்கு ஆகக் கூடுதலாக 23 கொள்கலன்கள் அளவில் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்தது. இவ்வாறு உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகர்களின் வேலை பழு காரணமாக ஒவ்வொரு கொள்கலன்களும் பௌதீக ரீதியாகப் பரீட்சிக்கப்படுவதில்லை எனவும் சில சந்தர்ப்பங்களின் போது வாப் இலிகிதராலேயே மாதிரிகள் கொண்டுவரப்படும் விதம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

உணவுப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கொழும்பு துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையம் போன்ற பரிசோதனைப் பகுதிகளுக்கு உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகர்கள் 12 பேர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பதவியணியினரின் எண்ணிக்கை 7 ஆகக் காணப்பட்டமையால் 5 பரிசோதகர்களின் பதவி வெற்றிட நிலையில் காணப்பட்டது.

### 3.8.3 உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகர்களை அறிவை நாளதுவரையாக்குவதற்காக போதியளவு பயிற்சிகளை வழங்கியிராமை

உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகர்களை ஆட்சேர்க்கையில் வழங்கப்படும் பயிற்சிக்கு மேலதிகமாக அவர்களது அறிவை நாளதுவரையாக விருத்தி செய்வதற்காக முறையான பயிற்றுவிப்பு நடவடிக்கை ஒன்றைச் செயற்படுத்தியிராததுடன் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது அவ் உத்தியோகத்தர்களுக்காக எந்தவித பயிற்சி நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**அறிவிப்பு**

i. உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகர்களின் பற்றாக்குறை காரணமாக இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் இருப்புகளின் மாதிரிகளைப் பெறுவது முறைப்படி மேற்கொள்ள முடியாமையால் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற

உணவுப் பொருள் இருப்பை சந்தைக்கு விநியோகிப்பதற்கான சந்தர்ப்பம் நிலவியது.

ii. இவ்வாறு ஒரே உத்தியோகத்தருக்கு பொறுப்புகள் பல ஒப்படைக்கப்படுவதனால் அந் நடவடிக்கைகளின் பயனுறுதி குறைவாகக் காணப்பட்டது.

**பரிந்துரை**

i. ஒருகொடவத்தை கொள்கலன் இறங்குதுறையில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள் பரிசோதனைப் பிரிவிற்கு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரித்து காரியாலய சேவை உதவியாளரை நியமித்தல்.

ii. பிரதான உணவு அதிகாரியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடமை சிக்கலாக உள்ளமையால் இதற்காக எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கை குறித்து கருத்திற்கொள்ளல்.

iii. உணவுப் பொருள் மற்றும் மருந்துப் பொருள் பரிசோதகர்களுக்கு முறையான பயிற்றுவிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

**சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கருத்துத் தெரிவிப்பு**

**அவதானிப்பு (3.8.3 பந்தி)**

“ இது மேலும் இவ்வாறே குறிப்பிடப்படுமாயின் மிக முக்கியம்வாய்ந்ததாகும்”

உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவின் சேவையில் ஈடுபட்டுள்ள உணவு மற்றும் மருந்துப்பொருள் பரிசோதகர்கள் இறக்குமதிப் பரிசோதனை நடவடிக்கைகள், ஏற்றுமதி பரிசோதனை நடவடிக்கைகள், சட்ட வரைபு நடவடிக்கைகள் போன்ற தேசிய மற்றும் சர்வதேச நிலையில் முக்கியம் வாய்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் அவர்களுக்கு அவ்வப்போது தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் உரிய செயற்பாடுகள் தொடர்பான ஓர் பயிற்சி வழங்கப்பட வேண்டும். ஆரம்ப காலங்களில் உணவு மற்றும் மருந்துப்பொருள் பரிசோதகர்களுக்காக வெளிநாட்டுப் பயிற்சி ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் கடந்த 05 ஆண்டு காலம் முதல் வெளிநாட்டுப் பயிற்சி ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4. பரிந்துரை

i. போசணை மிக்க உணவை நாட்டிற்கு இறக்குமதி செய்து நுகர்வோருக்கு வழங்குவது தொடர்பாக 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி பிரமாணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பிரதான உணவு அதிகாரியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் செயற்படுகின்றார். எனினும் அவரது கண்காணிப்பின் கீழ் செயற்படும் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவால் போசணை மிக்க உணவை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கான பிரமாணங்களை செயற்படுத்தும் செயலாற்றலும் இயக்கமும் போதாது எனவும் அதன் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக உணவு மாதிரிகளைப் பெற்று பரிசோதிப்பதற்காகச் சமர்ப்பிக்கும் செயன்முறையைப் பலப்படுத்த வேண்டியதாகவும் கண்காணிப்பை மேம்படுத்த வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ii. இறக்குமதி செய்யப்படும் உணவு தொடர்பான அதிகாரியாகச் செயற்படும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழான இலங்கை சுங்கத்தால் 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டம் மற்றும் 1969 இன் I ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) அதிகாரச்சட்டத்தின் படி உணவு இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் செயலாற்றலுடனும் இயக்கத்துடனும் மேற்கொள்ளப்படுவது போதாது என பரிந்துரை செய்யப்படுவதுடன் இந் நிலையைத் தவிர்த்துக்கொள்வதற்கு பிரதான உணவு அதிகாரியான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவு, இலங்கை தர நிர்ணயக் கட்டளைகள் நிறுவனம், அணுசக்தி சபை அத்துடன் உணவு மாதிரிகளின் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் ஏனைய அரசாங்க நிறுவகங்களுடன் பெருமளவு தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு போசணை மிக்க உணவு இறக்குமதி செய்யும் உணவைச் சந்தைக்கு விநியோகித்தல், நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகளை அகற்றுதல் அல்லது சேதமாக்குதல், மீள் ஏற்றுமதி செய்தல் முதலியவை தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட தரவு முறைமை ஒன்றைப் பேண வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

iii. 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டம் மற்றும் இதன் கீழ் உருவாக்கப்பட்ட கட்டளைகளின் செயற்பாடுகளுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளரால் அங்கீகரிக்கப்பட்ட அரச இரசாயனப் பகுப்பாய்வாளரான போதிலும் அவரிடம் உள்ள சில உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள தொகுதியைப் பரீட்சிப்பதற்காக பகுப்பாய்வு வசதிகள் இல்லாத காரணத்தால் தேவையான பரிசோதனைகளை எதிர்பார்க்கப்பட்ட இயக்கத்துடன் மேற்கொள்ள முடியாதிருந்தமையும் இதற்காக தேவையான நவீன வசதிகளை வழங்குவதன் மூலம் அத் திணைக்களத்தை மேலும் வலுவூட்ட வேண்டும் என்ற பரிந்துரையும் வழங்கப்பட்டுள்ளது.